2019 ஏப்ரல் 21 – 2026 ஏப்ரல் 21

# நினைவு, வேதனை மற்றும் நம்பிக்கை

**7 ஆண்டுகளுக்குப் பின்னரும், நீதியைத் தேடிதேடி !**

## நிறைவேற்றுச் சுருக்கம்

### அறிமுகம்

உயிர்த்த ஞாயிறு தினமான 2019 ஏப்ரல் 21 ஆம் திகதி இலங்கையில் இடம்பெற்ற மிலேச்சத்தனமான பயங்கரவாதத் தாக்குதலில் இருந்து ஏழு வருடங்கள் கடந்துள்ள தருணத்தில், சமூக சமய நடுநிலையம் (CSR) மூலம் விசேட அறிக்கையொன்றை வெளியிடுவதன் பிரதான நோக்கம் நினைவுகளை மீட்டுவதற்கும், வேதனையைப் பகிர்ந்துகொள்வதற்கும், அத்துடன் அதற்கும் அப்பால் சென்று நீதிக்கான நம்பிக்கையை அடைந்துகொள்வதற்காக உண்மையை அறிந்துகொள்வதற்கும் மற்றும் குற்றவியல் நீதி நிலைநாட்டப்படுவதற்க்கு ஏதேனும் தாக்கத்தை ஏற்படுத்துவதேயாகும். தாக்குதலின் பின்னர் ஏழு வருடங்கள் கடந்துள்ள நிலையில் புலன் விசாரணைகள் ஏதேனும் ஒரு சாதகமான திசையை நோக்கிச் செல்வதாகத் தெரிகின்ற அதேவேளை, இந்த அறிக்கையின் மூலம் இதுவரை இடம்பெற்ற எட்டு (08) புலன் விசாரணைகளின் செயன்முறையை விசாரணை ரீதியாக பகுப்பாய்வு செய்கின்றது.

உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் ஆராயும் நோக்கம் மாத்திரமன்றி அதனுடன் சமாந்தரமாக எழும் குற்றச்சாட்டுகளை மூடிமறைக்கும் அரசியல் நோக்கத்துடனும் கடந்த ஏழு வருடங்களுக்குள் குழுக்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் மூலம் பல விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

- நீதிபதி விஜித் மலல்கொட குழு: தாக்குதல் இடம்பெற்று 24 மணித்தியாலங்களுக்குள் நியமிக்கப்பட்ட இக் குழு, புலனாய்வுத்

தகவல்கள் கிடைத்திருந்த போதிலும் அதனைத் தடுக்கத் தவறியமை தொடர்பான அடிப்படை விடயங்களை வெளிப்படுத்தியது.

- ஜனக் டி சில்வா ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு: மிகவும் நீண்ட புலன் விசாரணையை மேற்கொண்ட இந்த ஆணைக்குழு, முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன உள்ளிட்டவர்களுக்கு எதிராக குற்றவியல் வழக்குகள் தொடர்வதற்கும், சில அமைப்புகளைத் தடை செய்வது முதல் கல்விச் சீர்திருத்தங்கள் வரையான பல பரிந்துரைகளைச் செய்தது.
- பாராளுமன்ற விசேட தெரிவுக்குழு: இதில் பாதுகாப்புப் பிரிவுகள் மத்தியிலான ஒருங்கிணைப்பில் பாரிய குறைபாடு காணப்பட்டமை மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் சஹ்ரான் தொடர்பில் அறிந்திருந்தமை வெளிப்படுத்தப்பட்டது. அத்துடன் உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் ஒரு தனித்த சம்பவமல்ல, மாறாக அதிகாரத்தைக் கைப்பற்றுவதற்கான ஒரு சதியின் விளைவா என்பது தொடர்பில் சந்தேகத்தை ஏற்படுத்தும் வகையிலான அவதானிப்புகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.
- நீதிபதி எஸ். ஐ. இமாம் : பிரித்தானியாவின் சனல் போர் (Channel 4) அலைவரிசையின் வெளிப்படுத்தல் தொடர்பில் நியமிக்கப்பட்ட இந்தக் குழு, குற்றம் சாட்டப்பட்டவர்களிடமே சாட்சிகள் கோரி அவர்களை அந்தக் குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவிக்க முயற்சித்துள்ளதாக மேலோட்டமாக அவதானிக்க முடிகிறது.
- நீதிபதி ஜயகி டி அல்விஸ் குழு : உயிர்த்த ஞாயிறு தாக்குதலின் ஆரம்பப் புலன் விசாரணைகளின் கண்காணிப்பு அதிகாரிகள் ஆகிய ரவி செனவிரத்ன மற்றும் ஷானி அபேசேகர ஆகியோர் தேசிய மக்கள் சக்தி அமைப்பின் ஓய்வுபெற்ற பொலிஸ் கூட்டமைப்பு நிகழ்ச்சியில் கலந்துகொண்டு சில நாட்களின் பின்னர் நியமிக்கப்பட்ட ஒரு குழுவாகும், மேலும் முந்தைய அறிக்கைகளுக்கு அப்பால் சென்று ஷானி அபேசேகர மற்றும் ரவி செனவிரத்ன ஆகியோர் தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டும் என அவதானிப்புகளை வழங்கியுள்ளது.

- 2019 ஏப்ரல் முதல் 2019 நவம்பர் வரையான குற்றவியல் புலன் விசாரணை : இந்தப் புலன் விசாரணைகளில் தாக்குதல்தாரிகளுடன் தொடர்புடைய கணிசமான எண்ணிக்கையானோரை குற்றப் புலனாய்வுத் திணைக்களம் கைது செய்ததுடன், அவர்களில் பெரும்பான்மையானவர்களுக்கு எதிராக ஏற்கனவே குற்றவியல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. சஹ்ரானை வழிநடத்திய தரப்பினர் யார் என்பது தொடர்பில் புலன் விசாரணை செய்துகொண்டிருந்த வேளையில் ஜனாதிபதித் தேர்தலுடன் புலன் விசாரணைகள் இடைநடுவில் நிறுத்தப்பட்டன.
- 2019 நவம்பர் முதல் 2024 அக்டோபர் வரை : அரசியல் தேவைகளின் அடிப்படையில் சில தரப்பினரை உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதலுடன் தொடர்புபடுத்த முயற்சித்தமை மற்றும் தாக்குதல் தொடர்பான உண்மையை மூடிமறைக்க முயற்சித்தமை தொடர்பிலும் இந்தக் காலப்பகுதியில் மேற்கொள்ளப்பட்ட புலன் விசாரணைகள் தொடர்பில் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன. புலன் விசாரணையின் முதல் இரண்டு ஆண்டுகளில் மாத்திரம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் பணிப்பாளர்கள் 05 இற்கும் மேற்பட்டோர் இடமாற்றம் செய்யப்பட்டனர்.
- 2024 அக்டோபர் முதல் இதுவரை : நீதி தொடர்பில் ஏதேனும் ஒரு நம்பிக்கை ஏற்படும் வகையில் புலன் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அடிப்படையில் சனல் போர் அலைவரிசையின் வெளிப்படுத்தல் தொடர்பில் புலன் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

உண்மையை வெளிப்படுத்துவதற்காக நியமிக்கப்பட்டதாக நாம் அவதானிக்கக்கூடிய அனைத்துக் குழுக்கள் மற்றும் ஆணைக்குழுக்களின் அறிக்கைகள் மூலம் சுட்டிக்காட்டப்படுவது என்னவென்றால், இந்தத் தாக்குதலானது சஹ்ரான் ஹாஷிம் உள்ளிட்ட ஒரு குழுவின் செயல் மாத்திரமன்றி, அதற்கும் அப்பால் சென்ற ஒரு திட்டமிட்ட சதியின் பண்புகளைக் கொண்டுள்ளது என்பதாகும்.

1. புலனாய்வுப் பிரிவுகளின் தோல்வி மற்றும் தவறாக வழிநடத்தல்: அரச புலனாய்வுச் சேவை (SIS) மற்றும் இராணுவப் புலனாய்வுப் பணிப்பாளர் சபை

(DMI) வசம் தாக்குதலுக்கு முன்னரான தகவல்கள் இருந்தபோதிலும், அவை முறையாகப் பரிமாறப்படவில்லை. குறிப்பாக சஹ்ரான் இலங்கையில் இருந்தபோதே அவர் இந்தியாவுக்கு சென்றுள்ளதாக இராணுவப் புலனாய்வுப் பிரிவுகள் தவறான கருத்தைக் கொண்டிருந்தமை பாரிய சந்தேகத்தை ஏற்படுத்துவதாகும்.

2. சனல் போர் வெளிப்படுத்தல், சுரேஷ் சலே மற்றும் புலனாய்வுப் பிரிவுகள் : ஹன்சீர் அசாத் மௌலானா மூலம் மேற்கொள்ளப்பட்ட வெளிப்படுத்தலின்படி, அரச புலனாய்வுச் சேவையின் முன்னாள் பணிப்பாளர் சுரேஷ் சலே மற்றும் பிள்ளையான் ஆகியோர் இந்தத் தாக்குதலுக்கு உதவி மற்றும் ஒத்தாசை வழங்கியதாகக் குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. மலல்கொட குழுவில் வெளிப்படுத்தப்பட்டது என்னவென்றால், பயங்கரவாதத் தடுப்புப் பிரிவு சஹ்ரான் தொடர்பான முழுமையான கோப்புகளை சட்டமா அதிபர் திணைக்களத்திற்கு அனுப்பவில்லை என்பதாகும். ஜனாதிபதி ஆணைக்குழு மற்றும் விசேட தெரிவுக்குழுவில் வெளிப்படுத்தப்பட்டது என்னவென்றால், இராணுவப் புலனாய்வுப் பிரிவுகள் இந்தச் சில குண்டுதாரிகள் தொடர்பில் நெருக்கமாகக் கண்காணித்தமை என்பதாகும். அத்துடன் அவர்களது குழுக்களின் உயர்மட்டத்திலுள்ள சில உறுப்பினர்களைப் பாதுகாப்புப் பிரிவுகள் தமது உளவாளிகளாகவும் இணைத்துக் கொண்டிருந்தமை என்பதாகும். அத்துடன் சனல் போர் ஊடாக அரசியல் சதியொன்று தொடர்பில் வெளிப்படுத்திய ஹன்சீர் அசாத் மௌலானா மற்றும் சஹ்ரான் தரப்பினருக்கு இடையில் தொடர்புகள் இருந்தமையை நீதிபதி இமாம் குழு ஏற்றுக்கொள்ள நேரிட்டமையும் விசேட அம்சமாகும்.

## நீதிமன்றச் செயன்முறை மற்றும் தற்போதைய நிலைமை

சட்டமா அதிபர் திணைக்களம் மூலம் இதுவரை உயிர்த்த ஞாயிறு அன்று இடம்பெற்ற தாக்குதல் தொடர்பில் மேல் நீதிமன்றங்களில் 41 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அவற்றில் மிகவும் முக்கியமான ஒரு வழக்காகக் காணப்படுவது 25 பேருக்கு எதிராக கொழும்பு நிரந்தர மூவரடங்கிய மேல் நீதிமன்றத்தில் விசாரிக்கப்படும் வழக்காகும். அது

நாளாந்தம் விசாரிக்கப்படும் ஒரு வழக்காகும் என்பதுடன் ஓர் எதிரி மரணமடைந்துள்ளமையினால் குற்றம் சாட்டப்பட்ட 24 பேருக்கு எதிராக வழக்கு விசாரிக்கப்படுகின்றது.

2024 அக்டோபர் மாதத்தின் பின்னர் புலன் விசாரணைகளில் சில முன்னேற்றம் காணப்படுகின்ற அதேவேளை, அதற்கமைய சுரேஷ் சலே உள்ளிட்ட மூன்று சந்தேகநபர்கள் இதுவரை கைது செய்யப்பட்டுள்ளனர். கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் அவர்களுக்கு எதிராக விடயங்கள் அறிக்கையிடப்பட்டுள்ளதுடன், குறித்த வழக்கின் சந்தேகநபர்களாக சுரேஷ் சலே உள்ளிட்ட மூவர் பெயரிடப்பட்டுள்ளனர். இது நீதி நிலைநாட்டப்படுவது தொடர்பில் ஏதேனும் ஒரு நம்பிக்கையை ஏற்படுத்துவதாகும்.

**மேலும் புலன் விசாரணை செய்யப்பட வேண்டிய விடயங்கள்**

நீதியை நிலைநாட்டும் செயன்முறை பூரணமடைவதாயின் பின்வரும் விடயங்கள் தொடர்பில் ஆழமான புலன் விசாரணை அவசியமென சமூக சமய நடுநிலையம் வலியுறுத்துகின்றது:

- அப்துல் லத்தீப் ஜமீல்: தாஜ் சமுத்திரா ஹோட்டலில் குண்டை வெடிக்கச் செய்யாத ஜமீலின் தொலைபேசி அழைப்புகள் மற்றும் அவரைப் பரிசோதிக்கச் சென்ற புலனாய்வு அதிகாரிகளின் நடத்தை, ஜமீலின் தொலைபேசி காணாமல் போனமை மற்றும் மௌலானாவின் குற்றச்சாட்டு.
- அபு ஹிந்த்: சஹ்ரானை வழிநடத்தியதாகக் கூறப்படும் இந்த இரகசியக் கதாபாத்திரத்தின் உண்மையான அடையாளம் மற்றும் அவருக்குப் பின்னால் உள்ள சக்தியை அடையாளங்காணல்.
- சாரா ஜஸ்மின்: சாய்ந்தமருது தாக்குதலில் இருந்து சாரா ஜஸ்மின் தப்பிச் சென்றாரா என்பது மற்றும் அவரது டி.என்.ஏ (DNA) பரிசோதனைகளில் காணப்படும் மர்மமான நிலைமையும், சஹ்ரான் குழுவிற்குள் அவரது வகிபாகம் மற்றும் அவருக்கு அடைக்கலம் வழங்கிய நபர்களை அடையாளங்காணல்.

- வனாத்தவில்லுவ மற்றும் புலனாய்வுப் பிரிவு முகவர்கள்: குண்டுதாரிகளின் குழுவிற்குள் இராணுவப் புலனாய்வுப் பிரிவுகளின் உளவாளிகள் இருந்தபோதிலும் தாக்குதலைத் தடுக்க முடியாமை.

## முடிவுரை மற்றும் கோரிக்கைகள்

சமூக சமய நடுநிலையத்தின் நிலைப்பாடானது உயிர்த்த ஞாயிறு தாக்குதலுக்குப் பின்னால் உள்ள "பிரதான சூத்திரதாரிகள்" மற்றும் 'திட்டமிட்டவர்களை' வெளிப்படுத்துவதற்காக மேலும் புலன் விசாரணைகள் இடம்பெற வேண்டும் என்பதாகும். எனவே:

1. இதுவரை மேற்கொள்ளப்பட்ட அனைத்துப் புலன் விசாரணை அறிக்கைகள் மற்றும் சாட்சிப் பதிவுகளைப் பொதுமக்களுக்குப் பகிரங்கப்படுத்த வேண்டும்.

2. இதுவரை இது தொடர்பில் ஆராய்ந்த குழுக்கள், ஆணைக்குழுக்கள் மற்றும் புலன் விசாரணைகளின் சாட்சிகள் மற்றும் கண்டுபிடிப்புகள் தொடர்பில் ஆராய்ந்து மேலதிக புலன் விசாரணைகளுக்கான ஆலோசனைகளை வழங்குவதற்கும், உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் உள்நாட்டு வெளிநாட்டு நிபுணர்களை உள்ளடக்கிய முழு அதிகாரமுடைய கலப்பு ஆணைக்குழுவொன்றை நியமிக்க வேண்டும்.

3. புலன் விசாரணைகளுக்கு இடையூறு விளைவித்த, சாட்சிகளை அழித்த மற்றும் புலன் விசாரணைகளைத் தவறாக வழிநடத்திய அனைவருக்கும் எதிராக ஒழுக்காற்று மற்றும் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

4. உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பில் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ள விசாரணைகளைத் துரிதப்படுத்துவதற்குத் தேவையான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல் மற்றும் விசாரணையாளர்களின் பாதுகாப்பை உறுதி செய்தல் வேண்டும் என்பதுடன், விசாரணைகளை நியாயமாக மேற்கொள்வதற்குத் தேவையான சூழ்நிலையை உருவாக்குவதற்காக, சர்ச்சைக்குரிய சாய்ந்தமருது சம்பவம் நடந்த சந்தர்ப்பத்தில் கிழக்குக் கட்டளைத் தளபதியாக இருந்த தற்போதைய பாதுகாப்புப் பிரதி அமைச்சர் திரு. அருண

ஜயசேகர விசாரணைகள் முடிவடையும் வரை குறித்த பதவியிலிருந்து நீக்கப்பட/விலக வேண்டும்.

5. சமூக சமய நடுநிலையம் 2025 ஏப்ரல் 17 ஆம் திகதி பகிரங்கப்படுத்திய மேலும் விசாரிக்கப்பட வேண்டிய 05 பிரதான விடயங்களில், சனல் ஃபோர் சம்பவம் தொடர்பான விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ள நிலையில், ஏனைய 04 விடயங்கள் தொடர்பிலும் துரிதமாக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட வேண்டும்.

6. உயிர்த்த ஞாயிறு பயங்கரவாதத் தாக்குதல் தொடர்பான அனைத்து சாட்சிகளின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

7. சமூக சமய நடுநிலையம் 2025 ஆம் ஆண்டில் பகிரங்கப்படுத்திய பாதிக்கப்பட்டோருக்கு ஏற்பட்ட பொருளாதார மற்றும் சமூகத் தாக்கம் குறித்த அறிக்கையையும் கருத்தில் கொண்டு, பாதிக்கப்பட்டோரின் இழப்பீட்டுச் செயன்முறை முறையாக மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏழு வருட தொடர்ச்சியான போராட்டத்தின் விளைவாக தற்போது ஏற்பட்டுள்ள நம்பிக்கையை, நீதி நிலைநாட்டப்படும் வரை முன்னெடுத்துச் செல்ல அனைவரும் ஒன்றிணைய வேண்டும்.

**ஆராய்ச்சிக் குழு**
**சமூக சமய நடுநிலையம் (CSR).**
2026 ஏப்ரல் 17 ஆம் திகதி